அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 08/2019

எனது இலக்கம் : EST-3/DICIP/06/0269
பொது நிர்வாக மற்றும்
அனர்த்த முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2019.03.28

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**தாபன விதிக்கோவையின் II ஆம் வகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 36 ஆம் பிரிவினை திருத்தியமைத்தல்**

தாபன விதிக்கோவையின் II ஆம் வகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 36 ஆம் பிரிவின் பால் தங்களது கவனத்திற்கு கொண்டு வருகின்றேன்.

02. அப் பிரிவினுள் பின்வரும் வகையில் 36:8 ஆக புதிய உப பிரிவொன்றினை உள்ளடக்குவதற்கு 2019.01.29 ஆந் திகதியன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

36:8 விருப்பத்தேர்வு ஓய்வு பெறும் வயதினை அடைவதற்கு முன்னர் அலுவலரொருவர் ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் பிரிவிற்கு ஏற்ப அல்லது சட்டத்தின் மூலம் ஓய்வு பெறச் செய்யப்பட வேண்டிய சந்தர்ப்பத்தின் போது அலுவலர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கையொன்று இடம்பெறுமாயின் அவர் ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 12 பிரிவின் கீழ் கொள்ளப்பட்டு ஓய்வுபெறச் செய்வதற்கும், ஒழுக்காற்று நடவடிக்கை நிறைவு பெற்று ஒழுக்காற்றுக் கட்டளை வழங்கப்பட்டதன் பின்னர் அவ் ஒழுக்காற்றுக் கட்டளையினை நடைமுறைப்படுத்துவதற்கு கீழ்ப்பட்டு அவர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கையொன்று காணப்படுவதில்லை எனின் அவர் ஓய்வு பெறச்செய்வதற்குள்ள பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அவரின் ஓய்வூதியத்தினை தயாரிக்கும் நடவடிக்கையினை மேற்கொள்ளல் வேண்டும்.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
பொது நிர்வாக மற்றும்
அனர்த்த முகாமைத்துவ அமைச்சு